## அமைச்சர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் - அரசு அலுவலர்கள் - கழக நிர்வாகிகள் தீவிரம்!

# புயல் வெள்ளம்: உறக்கமின்றி பணியாற்றி மக்கள் துயர் நீக்கும் கழக அரசு!



நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் ஆகியோர் சோழிங்கநல்லூர் மண்டலம். நூக்கம்பாளையம் லிங்க் சாலையில் கனமழை மற்றும் மிக்ஜாம் புயல் தாக்கத்தினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் களப்பணி நடவடிக்கைகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். அதுபோது முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ., துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், மண்டல கண்காணிப்பு அலுவலர் வீரராகவ ராவ், தெற்கு வட்டார துணை ஆணையர் எம்.பி.அமித், மண்டலக் குழுத் தலைவர் மதியழகன், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.




சென்னையில் மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்ட குடியிருப்பு பகுதி பொதுமக்களுக்கு நேற்று முன்தினம் (07.12.2023) தோட்டக்கலை துறையின் சார்பில் நடமாடும் வாகனங்கள் மூலம் மலிவு விலையில் காய்கறிகள் விற்பனையை வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் துவக்கி வைத்தார். இந்த நிகழ்வின்போது வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி. அபூர்வா, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் ஆர்.பிருந்தாதேவி மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றியம் வயலூர் கிராமத்தில் வசிக்கும் கன மழையால் பாதிக்கப்பட்ட நரிக்குறவர்களுக்கு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் அமைச்சர் சு.முத்துசாமி அரிசி, போர்வை உள்ளிட்ட நல உதவிகள் வழங்கினார். உடன் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., ஒன்றியக் கழகச் செயலாளர் கெ.ஞானசேகரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.நாகன், பேரூர் கழக செயலாளர் என்.எஸ். பாரிவள்ளல், பேரூராட்சி தலைவர் பி.சசிகுமார், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் உத்தரமேரூர் கே.தயாளன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணியின் துணை அமைப்பாளர் விசூர் ஊராட்சி மன்ற தலைவர் மூர்த்தி, ஒன்றிய கழக அவை தலைவர் தா.சுப்பராயன், ஒன்றிய கழகத் துணைச் செயலாளர் சுகுணா சுந்தர்ராஜன், சிவா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (07.12.2023) மிக்ஜாம் புயல் பாதித்த பகுதிகளான சென்னை, சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திடீர் நகர், கோதாமேடு போன்ற பகுதிகளில் 5000 குடும்பங்களுக்கு மேலாக பால் விநியோகம் செய்தார். உடன் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல குழுத்தலைவர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் இருந்தனர்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (7.12.2023) சென்னை, வால்டாக்ஸ் சாலை மூலக் கொத்தளம், காவலர் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் மழை நீர் வெளியேற்றும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என். நேரு, நேற்று முன்தினம் (07.12.2023) மணலி மண்டலம், எஸ்.ஆர்.எஸ். லிமிடெட் நிறுவனத்தில் மிக்ஜாம் புயல் நிவாரணப் பணிகளுக்காக தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள சமையல் கூடம் மற்றும் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு வழங்கப்படவுள்ள நிவாரணப் பொருட்களைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, நிவாரணப் பணிகளை தொய்வின்றி மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது, மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம், துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை அரசு முதன்மைச் செயலாளர்/மிக்ஜாம் புயல் மீட்புப் பணி சிறப்பு அலுவலர் தர்மேந்திர பிரதாப் யாதவ், சென்னைக் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், மண்டல கண்காணிப்பு அலுவலர்கள் திருமதி எஸ்.திவ்யதர்ஷினி, சிவகுரு பிரபாகரன், மண்டலக் குழுத் தலைவர் ஏ.வி.ஆறுமுகம் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



“மிக்ஜாம் புயல்” காரணமாக ஏற்பட்ட மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு தங்குதடையின்றி காய்கறிகள் மற்றும் மளிகைப் பொருட்கள் கிடைக்கும் வகையில் கூட்டுறவுத்துறையின் மூலம் சென்னை, தேனாம்பேட்டை காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடியிலிருந்து பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு காய்கறிகள் மற்றும் மளிகைப்பொருட்களை விற்பனை செய்ய செல்லவுள்ள நகரும் காய்கறி மற்றும் மளிகைப்பொருட்கள் விற்பனை வாகனத்தினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் நேற்று முன்தினம் (07.12.2023) ஆய்வு செய்து அனுப்பி வைத்தார். உடன் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர்.கே.கோபால், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர். ந.சுப்பையன் ஆகியோர் உள்ளனர்.



மிக்ஜாம் புயல் கனமழை பாதிப்பு மீட்பு பணியில் இராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட 53வது வார்டு கண்ணன் தெரு, மின்ட் ரவுண்டானா பகுதியில் மழைநீர் பாதிப்புக் குறித்து அமைச்சர் ராஜகண்ணப்பன், இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி, சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வுசெய்து, நிவாரண உதவிகள் வழங்கினர். உடன் அரசு அதிகாரி விஜயகார்த்திகேயன், இராயபுரம் பகுதி செயலாளர்கள் வ.பெ.சுரேஷ், இரா.செந்தில்குமார், அரசு உயர் அதிகாரிகள், மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் இருந்தனர்.




திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதிக்குட்பட்ட ஆர்.கே.பேட்டை எஸ்.வி.ஜி.புரம் பகுதியில் மிக்ஜாம் புயல் பாதிக்கப்பட்ட 100 குடும்பங்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசியமான நிவாரணப் பொருட்களை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி வழங்கினார். இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. உள்பட ஒன்றிய செயலாளர்கள், மாவட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



வடகிழக்கு பருவமழை மற்றும் மிக்ஜாம் புயல் காரணமாக திருவள்ளூர் மாவட்டம், பூண்டி மற்றும் கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நிவாரண உதவிகளை வழங்கினார். உடன் சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, டி.ஜெ. கோவிந்தராஜன், மாவட்ட வருவாய் அலுவலர் ஆர்.ராஜ்குமார், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் மரு.என்.ஒ.சுகபுத்திரா, மாவட்ட துணைச் செயலாளர் டாக்டர் வி.சி.ஆர். குமரன், உட்பட உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் உள்ளனர்.